**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, ஜூன் – 2016**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல்லுக்கு முதலில் வரும் உயிரெழுத்துகள் எத்தனை?
2. உடன்நிலை மெய்ம்மயக்கத்தில் வரும் மெய்யெழுத்துகள் எத்தனை?
3. இயற்கை அளபெடை என்றால் என்ன?
4. எழுத்ததிகாரத்தில் எத்தனை இயல்கள் உள்ளன?
5. தொல்காப்பியர் காற்றுப் பொருந்தும் இடங்களாகக் குறிப்பிடும் உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
6. ஐ, ஔ ஆகிய இரண்டையும் மொழிநூலார் எவ்வாறு அழைக்கின்றனர்?

7. ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன?

8. இடைநிலைகள் எத்தனை வகைப்படும்?

9. செய்யுள் விகாரங்கள் எத்தனை?

10. சொல்லின் ஈற்றிலே வரும் மூன்று வினா எழுத்துகள் யாவை?

11. முச்சுட்டு என்று கூறப்படுவன யாவை?

12. ஒடு உருபின் முன்னர் வரும் வல்லினம் எவ்வாறு ஆகும்?

13. வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால், ணகர னகரங்கள் எவ்வாறு திரியும்?

14. இலக்கணப் போலிச் சொற்கள் என்றால் என்ன?

15. "அவற்றை" – இதில் வந்துள்ள சாரியை யாது?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தை சான்றுகள் தந்து விளக்குக.
2. போலி என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.
3. நன்னூலார் வரையறுக்கும் இருவகைப் பதங்களை எடுத்துரைக்க.
4. சார்பெழுத்துகளின் பிறப்பு குறித்து தொல்காப்பியம், நன்னூல் கூறும் கருத்துகள் யாவை?
5. செய்யுள் விகாரங்கள் குறித்து விவரித்துரைக்க.
6. அகர ஈற்றுச் சிறப்பு விதிகளைச் சான்றுகள் தந்து விளக்குக.
7. வருமொழியில் தகர நகரங்கள் எவ்வாறு திரிகின்றன என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.
8. சாரியைகள் என்றால் என்ன? விளக்கியுரைக்க.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சார்பெழுத்துகளின் வகைகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) மொழி முதல், மொழி இறுதி எழுத்துகள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) உயிர் எழுத்துக்களின் பிறப்புகளைத் தொல்காப்பியம் நன்னூல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஓர் எழுத்து ஒருமொழி, தொடர் எழுத்து ஒரு மொழி இரண்டினையும் சான்றுகளுடன் விளக்குக.

3. (அ) புணர்ச்சி என்பதை விளக்கி உயிர் ஈற்றுப் புணர்ச்சியின் விதிகளை சான்றுகளுடன் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வல்லினம் மிகு இடங்கள், வல்லினம் மிகா இடங்கள் இரண்டின் விதிகளையும் சான்றுகள் தந்து விளக்குக.